*1995 ஏப்ரல் 26*]

அதற்கான அனுமதியை வழங்குகிறார்கள். அந்த அடிப்படையில் தான் அந்தக் குளங்களில் மண் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. ஆகவே, முழுமையாக தனியாரிடத்தில் குளங்களைப் பராமரிப்புக்கு விடுவதற்கு உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 449, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**449—**

**மல்லியம்மன் துர்க்கம் மலைக்கு மின் வசதி**

**21798*—**திருமதி அ.தி. சரஸ்வதி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி, மல்லியம்மன் துர்க்கம் மலைக்கு மின் வசதி ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் தொகுதி, கடம்பூர் மலையில் உள்ள மல்லியம்மன் துர்க்கம் பகுதிக்கு புதிய மின்பாதை அமைக்க, மின் பாதைக்கான வழிச் சுற்றாய்வு செய்து வனத் துறையினரிடமிருந்து அனுமதி பெற வேண்டி உள்ளது. தற்பொழுது இங்கு சந்தனமரக் கடத்தல் கும்பல் நடமாட்டம் பிரச்சினை இருந்த காரணத்தால் காவல் துறையினரால் இப்பகுதிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, காவல் துறை விதித்துள்ள தடை நீக்கம் செய்யப்பட்ட பிறகே, மின் பாதை அமைப்பதற்கான சுற்றாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரை கோடி தமிழக மக்களின் இதயத்திலும், ஒன்றரை கோடி கழகத்தின் உடன்பிறப்புகள் இதயத்திலும் இடம் பெற்று தமிழகத்தின் ஒப்பற்ற ஆட்சியை நடத்தி வரும் நம்முடைய புது உலகம் படைத்து, பூபாள இராகம் இசைத்திடும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில் திறமையுடன் துறையை வழிநடத்திச் செல்லும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு

செய்யப்படும் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, அந்தப் பகுதி மக்கள் காலம் காலமாக மின்சாரம் இல்லாமல், ஏழையெளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மின்வசதிக்கு அங்கே ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதி, மல்லியம்மன் துர்க்கம் பகுதி, கடம்பூர் மலை சார்ந்த பகுதி, அடர்ந்த காட்டுப் பகுதி. இந்தப் பகுதியில் 14 கிலோ மீட்டர் தூரம் மரத்தாலான கம்பங்கள் நட்டு அதன்மேல் கண்டக்டர்ஸ், மின்னூக்கிகள் எல்லாம் அமைத்து அந்தப் பகுதிக்கு மின்வசதி செய்யப்பட்டு இருந்தது. 1979ஆம் ஆண்டு இந்த மின் பாதை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. அங்கே சில ஆண்டுகளாக அந்தப் பகுதியில்தான் இந்தச் சந்தனக் கடத்தல் கும்பல் சம்பந்தமாக பிரச்சினை இருக்கிற காரணத்தால் நம்முடைய காவல் துறையினர் அங்கே வேலை செய்யக் கூடாது என்று தடை விதித்து இருக்கிறார்கள். ஏனென்றால், அங்கே தேடுகிற பணி நடந்து கொண்டிருக்கிறது. அங்கேபோய் அதிகாரிகள் வேலையைச் செய்கின்றபோது, ஏதாவது பிரச்சினைகள் வந்துவிட்டால் அதிகாரிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்திற்காகத்தான் சொன்னேன். மேலும், அது காவல்துறையினுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. ஆகவே, பணிகளை நாம் தொடர்ந்து செய்ய முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிற காரணத்தால்தான், நான் ஏற்கெனவே அவ்வாறு தெரிவித்தேன். மேலும், அந்தப் பகுதியில், நம்முடைய வனத்துறையின் மூலம் நாம் அனுமதி பெறவேண்டி இருக்கிறது. ஆகவே, அதற்கு என்று மதிப்பீடுகள் தயார் செய்து, ஆய்வுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. வனத்துறையினுடைய ஒப்புதல் கிடைத்தவுடன், அங்கேயிருக்கிற காவல் துறையினுடைய கட்டுப்பாடு, விதிக்கப்பட்ட கட்டுப்பாடு தளர்த்தப்பட்டவுடன், உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் நிச்சயமாக புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*1995 ஏப்ரல் 26*]

**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஏற்பாடு செய்யப்படும் என்று கூறியமைக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். பொதுவாக, அடர்ந்த காட்டுப் பகுதிகளில், யானைகள் வாழும் பகுதிகளில் உள்ள மரக் கம்பங்களுக்குப் பதிலாக, இரும்புக் கம்பங்களைப் போட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். காரணம், மரக்கம்பங்களை எல்லாம் யானைகள் பிடுங்கி வீசிவிடுகின்றன. ஆதலால், மலைப் பகுதியில் இருக்கும் மரக் கம்பங்களை மாற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, இரும்புக் கம்பங்களைப் போட ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் *1979*-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட நிலையைத் தான் சொன்னேன். ஏற்கெனவே, மரக்கம்பங்களாலான லைன் இருந்தது. அது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே, இனிமேல் போடுகின்ற கம்பங்கள் எப்படிப்பட்ட கம்பங்களாக இருக்கவேண்டுமோ நம்முடைய மின்சார வாரியத்தில் இருக்கும் தொழில் நுட்ப வல்லுநர்கள் மலைப்பகுதிக்கு ஏற்றவாறு எப்படிப்பட்ட கம்பங்கள் அமையவேண்டுமோ, அதைத்தான் நிச்சயமாக அந்தப் பகுதியிலே அமைப்பார்கள். நீண்டநெடுங்காலங்களுக்கு இருக்கவேண்டும் என்றுதான் இப்படிப்பட்ட தொழில் நுட்ப ஆய்வுகளைச் செய்ததற்குப் பின்னாலேதான், மலைப் பகுதியிலே மின்சார விநியோகம் செய்கின்றபோது, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஆகவே, இரண்டு சூழ்நிலைகள் இருக்கின்றன. இன்றைக்கு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், தெளிவாக மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, நாம் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஒன்று, வனத்துறையினுடைய அனுமதி வேண்டும். அதற்கான வேலைகளில் ஈடுபட்டு இருக்கிறோம். இரண்டாவது, காவல் துறையினுடைய கட்டுப்பாடு தளர்த்தப்படவேண்டும். அதற்கு இன்னும் கொஞ்ச காலம் பிடிக்கும். இந்த இரண்டும் கூடிய சீக்கிரம் முடிவு பெற்றவுடனேயே, உடனடியாக பணிகள் தொடங்கப்படும். அந்தப் பகுதிக்கு எது சரியாக இருக்குமோ, அப்படிப்பட்ட கம்பங்கள்தான் நடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.